56

1352

Saratha Reading Series

Book III For Class III

சாரதா நவீன

மூன்றும் பாடம்

(மூன்றும் வகுப்பு)

(Revised Edition.)

BY

T. N. SUBBIAH VASTAD,

Late Assistant.

Veeraraghava's Secondary School,

TANJORE.

1937.

T. N. SUBBIAH & SONS,

BOOK-SELLERS & PUBLISHERS

TANJORE.

Saratha Reading Series

BOOK III FOR CLASS III

சாரதா நவீன
மூன்றும் பாடம்

(மூன்றும் வகுப்பு)

BY

T. N. SUBBIAH VASTAD,

Late Assistant,

Veeraraghava's Secondary School, TANJORE.

3-JUL 1937

1347

(Revised Edition)

BY

L. Olaganatha Pillai

Ex. Lecturer in Tamil, Sanskrit College,

TIRUVADI.

PUBLISHED BY

T. N. SUBBIAH & SONS,

BOOK-SELLERS AND PUBLISHERS,

TANJORE.

All Rights Reserved] **1937** [Price 3½ Annas.

3-JUL 1937
MADRAS

பொருளடக்கம்.

பாடம்	விஷயம்	பக்கம்
1.	கடவுள்.	5
2.	பரசுராமர்	7
3.	யானை	10
4.	சூரியன்	13
5.	சிங்கமும் சுண்டெலியும்	16
6.	காகம்	18
7.	உடல் நலம்	20
8.	பிரகலாதன்	23
9.	செங்கல்லின் சரித்திரம்	25
10.	மளிகைக்கடை	27
11.	மண்புழு	29
12.	புலியும் பிராமணனும்	30
13.	தேள்	32
14.	கண்ணகி	35
15.	ஆடு	38
16.	தாவரம்	40
17.	ஈ	42

18	தச்சன்	...	...	44
19.	பருந்து	...	...	46
20.	போலீஸ் சேவகன்	...	...	48
21.	கண்ணப்பர்	...	...	51
22.	துஷ்டப்பையன்	...	...	55
23.	துகாராம் சுவாமிகள்	...	...	58
24.	மணியார்டர்	...	...	60
25.	காரைக்காலம்மையார்	...	...	64
26.	கொன்றை வேந்தன்	...	...	69

3-JUL 1937
MADRAS

சாரதா நவீன மூன்றும் பாடம்.

1. கடவுள்.

பிள்ளைகளே, நீங்கள், உங்கள் பெற்றோர்களுடனாவது, சகோதரர் முதலிய மற்றோர்களுடனாவது, கோவிலுக்குப் போகிறீர்கள் அல்லவா? அவர்கள் அங்குபோய் என்ன செய்கிறார்கள்? அவர்கள் கோவிலுக்கு போய் அங்கு கடவுளை வணங்குகிறார்கள். ஏன் வணங்குகிறார்கள் என்பதை யோசித்துப் பாருங்கள்? கடவுள் இவ்வுலகத்திலுள்ளோர் எல்லோரிலும் மிகவும் பெருமை வாய்ந்தவர். எல்லாம் வல்லவர். எங்கும் நிறைந்தவர்.

கடவுள் நமது நன்மைக்காகவே செடி, கொடி, மரம், புல், பூண்டு முதலிய தாவரங்களையெல்லாம் உண்டாக்கியுள்ளார். சிலபுஷ்பச் செடிகளில் அழகிய புஷ்பங்கள் பூக்கின்றன. செடி, கொடி, மரங்கள் முதலியவைகளில் நாம் உண்ணும் காய், கறி முதலியவைகள் உண்டாகின்றன. பலவித உருசியுள்ள கனிகளும் அவைகளிலிருந்து நமக்குக் கிடைக்கின்றன. வெயிலால் களைத்து வரும் மனிதர் முதலியோருக்குக் குளிர்ந்த நிழலையும் தருகின்றன. மரங்கள்

அடர்ந்த ஓர் சோலையில் பசுமையான இலை களைப் பார்ப்பதினுல் மிக்க குளிர்ச்சியாய் இருக் கிறது அல்லவா?

மரங்கள் நாம் வாசம் செய்யும் வீட்டிற்கு வேண்டிய கட்டிடச் சாமான்களும், நாம் உப யோகிக்கும் மேஜை, பெட்டி, நாற்காலி முதலிய சாமான்கள் செய்ய உதவும் பலகை முதலியவை களும் கொடுக்கின்றன. நாம் உண்ணும் உண வைச் சமைக்க விறகாகவும் உபயோகமாகின் றன.

நமக்குத் தினந்தோறும் உபயோகப்படு கின்றவை, காற்று, தண்ணீர், நெருப்பு முதலிய வை அல்லவா? நாம் சுவாசிப்பதற்குக் காற்று இல்லாமல் முடியுமா? மூச்சு விடா விட்டால் நாம் உயிரோடு இருக்க முடியாது. ஆகை யால் நமக்கு இவ்வளவு உபயோகமுள்ள காற் றை அளித்தவர் எவ்வளவு நல்லவர் பாருங் கள்! தண்ணீர் இல்லாவிடில் நாம் குடிக்கவும் குளிக்கவும், சமைக்கவும் முடியுமா? யோசித்துப் பாருங்கள்! நெருப்பு நமக்கு அவசியம் அல்ல வா? இவ்வளவு சிறந்த பொருள்களை யெல்லாம் நமக்காகக் கடவுளே படைத்தார்! இவைகளால் நாம் சுகமாய் வசிக்கிறேமல்லவா?

ஆகையால் கடவுள் எவ்வளவு கருணையுள் ளவர்! எவ்வளவு சக்தியுள்ளவர்!! நமக்கு நல்ல

அறிவை அளிப்பவரும் கடவுள்தானே! இதற்காக நாம் தினந்தோறும் காலேயிலும் மாலேயிலும் அவரை வணங்க வேண்டும். அப்படி நீங்கள் செய்தால் நல்லவர்களாக ஆவீர்கள். கடவுளும் உங்களுக்கு ஆசீர்வாதம் செய்வார்.

நாம் கடவுளிடத்தில் எவ்வாறு பக்தியாயும், பிரியமாயும், இருக்கிறேமோ, அவ்வாறே நம்மையாளும் அரசரிடத்திலும் இருக்க வேண்டும். நமது அரசர் செய்யும் சட்ட திட்டங்களுக்கு அடங்கி நடந்தால் கடவுள் நம்மீது அதிக பிரியமாயிருப்பார்.

---

2 பரசுராமர்

முன் ஒரு காலத்தில் ஜமதக்கினி என்ற ஓர் முனிவர் இருந்தார். அவருடைய தவப்பயனுல் அவருக்கு ஒரு நல்ல புத்திரன் பிறந்தான். அப்புத்திரன் பெயர் பரசுராமர் என்பது.

ஜமதக்கினி முனிவரிடத்தில் காமதேனு இருந்தது. அது உடல் பசு வடிவமும் தலே மனித வடிவமும் உள்ள ஒரு பிராணி. அக்காலத்தில் அரசு செலுத்தி வந்த கிருதவீரியன் என்னும் அரசன் அக்காமதேனுவை விரும்பித் தனக்குக் கொடுக்கும்படி அவரைக் கேட்டான். முனிவர் அதை கொடுக்க மறுத்தார்.

அரசன் கோபங்கொண்டு முனிவரின் தலையைக் கொய்து அக்காமதேனுவை கைப்பற்றினுன்.

இச்செய்தி முனிவரின் குமாரரான பரசுராமருக்குத் தெரிந்தது. அவர் அரசன் மீது கோபங்கொண்டு, "நான் க்ஷத்திரியர்களையெல்லாம் கொன்று அவர்களுடைய இரத்தத்தை



ஒரு மடுவாகத் தேக்குவேன்," என்று ஒரு பெரிய சபதம் செய்து கொண்டார். பிறகு, அரசனை கிருதவீர்யனுடன் போர் செய்து அவனைக் கொன்ருர். கிருதவீரியனுக்குக் கார்த்தவீரியார்ச்சுனன் என்ற ஒரு குமாரன் இருந்தான். அவன்

பரசுராமரை எதிர்த்தான். அவனையும் பரசுராமர் கொன்ருர். பரசுராமர் மற்றும் பல க்ஷத்திரியர்களையும் கொன்று விட்டு வடக்கிலுள்ள ஒரு பெரிய மலையில் தவஞ் செய்ய ஆரம்பித்தார்.

அக்காலத்தில் வடநாட்டில் ஜனகர் என்னும் மன்னர் ஒருவர் அரசாண்டு வந்தார் அவருடைய புத்திரி சீதை. அம்மகாராஜனிடத்தில் ஒரு பெரிய வில் இருந்தது. அதை வளைக்க ஒருவராலும் முடியவில்லை அவ்வில்லை எடுத்து வளைக்கும் அரசனுக்குச் சீதையை மணம் செய்விப்பதாக ஜனகர் விளம்பரம் செய்திருந்தார். பல அரசர்கள் வந்து வில்லை வளைக்க முயன்றும் ஒருவராலும் முடியவில்லை. கடைசியில் தசரதகுமாரரான இராமர் வில்லை வெகு அலக்ஷியமாய் எடுத்து வளைக்கும்போது அவ்வில் மளுக்கென்று ஒடிந்தது. ஜனகர் சந்தோஷங் கொண்டு சீதையை இராமருக்கு மணம் செய்வித்தார்.

இராமர் வில்லை முறித்த செய்தி பரசுராமருக்குத் தெரிந்தது. உடனே அவர் இராமர் முன் வந்து, "அடே! க்ஷத்திரியா! நீ முறித்த வில் பழைய வில். இதோ இருக்கும் எனது வில்லை எடுத்து வளை. இல்லாவிடில் என்னுடன் போருக்கு வா," என்று கூறினுர். இராமர் அவ் வில்லை எடுத்து ஒரு நொடியில் வளைக்க, பரசு

ராமர் மகிழ்வுற்றுர். மறுபடியும் அவர் மலைக்குச் சென்று தவஞ் செய்து கொண்டிருந்தார். அவருக்கு இறப்பு இல்லை யென்றும், அவர் தெய்வத் தன்மை உடையவரென்றும் பெரியோர்கள் சொல்லுகிறுர்கள்.



3 யானை

இப்பூமியின்கண் உள்ள மிருகங்கள் எல்லாவற்றினும் மிகப் பெரியது யானை. உயரத்திலும் பருமனிலும் இதை நிகர்த்த வேறு மிருகம் இல்லை. இது காடுகளில் வசிக்கும் மிருகங்களில் ஒன்று.

யானைக்குத் தலை மிகப்பெரியது. கண்கள் மிகச் சிறியவை. காதுகள் வெகு அகலமானவை. கழுத்து மிகவும் குறுகியது கால்கள் தூண் போல் பருத்தவை. மேல் தோல் வெகு அழுத்தமாய் இருக்கும். வாலில் அதிக மயிர் இல்லை. இதன் மூக்கு வெகு நீளமாய்த் தொங்கும். இந் நீளமான மூக்கிற்குத் துதிக்கையென்று பெயர். துதிக்கையின் நுனியில் ஒரு விரல் உண்டு. அது அவ்விரலால் மிக நுண்ணிய பொருளையும் விடாது எடுக்கும். இத்துதிக்கை இல்லாவிடில் ஆகாரம் ஜலம் முதலியவற்றை எடுத்துப் புசிக்க அதனுல் முடியாது. ஆண் யானைக்குத் துதிக்கையின் இருபுறத்திலும் நீண்ட இரண்டு தந்தங்கள் உண்டு.

யானை நுட்ப புத்தியுடைய மிருகம். இதைப் பிடித்து வேலை செய்யப் பழக்குவார்கள். யானைகள் வசிக்கும் கர்ட்டின் மத்தியில் ஒரு பெரிய அடைப்புக்கட்டி அதற்குள் யானையைப் புகும்படிச் செய்து பிடிப்பார்கள். அல்லது பெரிய குழி ஒன்று வெட்டி அதன் மேல் இலை தழைகளைப் பரப்புவார்கள். யானை அக்குழியண்டை வந்து தழைகளைத் தின்னப் போகும் போது அக்குழியில் விழுந்து விடும். பிறகு அதைப் பிடித்துப் பழக்குவார்கள்.

யானை மாமிசம் தின்னாது. தழைகளும் வளர்ந்த புற்களும் அதற்குத் தீனியாகும். அது மிகுந்த பலம் உடையது. பெரிய மரங்களையும் வேருடன் பிடுங்கிவிடும் யானை சுமார் 100 முதல் 150 ஆண்டுகள் வரை வாழும். முன் காலத்தில் யானைகளைச் சண்டைகளில் உபயோகப்படுத்தினார்கள். இக்காலத்தில் அவ்விதம் இல்லை. மலைச்சாரல்களிலும் காடுகளிலும் வெட்டின மரங்களைத் தூக்கிவர யானை உபயோகப்படுகிறது யானையின் தந்தம் மிக விலையுயர்ந்தது. யானைத் தந்தத்தினால் பெட்டிகள், சீப்புகள் முதலியன செய்யலாம். இந்தியர்கள் கோவில்களிலும் சுதேச அரசர்களின் அரண்மனைகளிலும் யானைகளை கௌரவத்திற்காக வளர்க்கிறார்கள்.

யானையின் வேறு பெயர்கள்.

கரி.	அத்தி.
கஜம்.	சிந்துரம்.
களிறு.	வேழம்.
குஞ்சரம்.	வாரணம்.
தந்தி.	பகடு என்பனவாம்.



4 சூரியன்

பிள்ளைகளே! வானத்தைப் பாருங்கள். அங்கு, சூரியனும் மேகங்களும் தோன்றுகின்றன. அவற்றுள், சூரியனைப்பற்றியே நீங்கள் இப்பொழுது படிக்கத் தொடங்குகின்றீர்கள்.

சூரியன் காலையில் கிழக்குத் திசையில் தோன்றி, மாலையில் மேற்குத் திசையில் மறைகிறது. அவ்வாறு அது தோன்றியது முதல் மறைவதுவரையுள்ள காலம் பகல் என்பதாகும்.

பகலில் நமக்கு விளக்கு வேண்டுவதில்லை. சூரியன் நமக்குப் பகலில் வேண்டிய வெளிச்சத்தைக் கொடுக்கிறது. மாலையில் அது மறைந்து

போவதால், வெளிச்சம் இல்லாமற் போகிறது. இரவும் உடனே வந்து விடுகிறது. அப்பொழுதுதான் நமக்கு விளக்கு வேண்டும்.

பகலில் சில நேரங்களில் நமக்குக் காலில் பாதரட்சை யில்லாமல் நடக்க முடிகிறதில்லை. ஏன் தெரியுமா? சூரியன் நமக்கு வெளிச்சத்தோடு சூடும் தருகிறது.

சூரியன் நமக்கு ஒளியையும் சூட்டையும் தருகிறபடியால் அது எறிந்து கொண்டிருக்கிற நெருப்புப் போன்ற பொருளாய் இருத்தல் வேண்டும். அதன் உருவம் நமக்கு வட்டமாய்த் தோன்றுகிறது. ஆனல் அது வட்டமான பொருளன்று. அது பந்து போல் உருண்டை வடிவமானது. ஆகையால் சூரியனை ஒரு நெருப்பு உருண்டை அல்லது நெருப்புப் பந்து எனச் சொல்லலாம்.

அது நமக்குக்காணப்படுவது போலச் சிறிய பொருளும் அன்று. அது ஒரு பிரமாண்டமான உருண்டை. வெகு தூரத்திற்கு அப்பால் உள்ள ஒரு மரம் நமக்குச் சிறியதாய்த் தெரிகிறதல்லவா? அதுபோலச் சூரியன் நமக்குப் பல்லாயிரம் மைல் தூரத்திற்கு அப்பால் இருக்கிறபடியால் அது நமக்குச் சிறியதாய்க் காணப்படுகிறது.

பிராணிகளும், செடி கொடிகளும் உயிரோடிருப்பதற்குச் சூரியனே ஆதாரம். சூரியனில்லா

விடில் ஒரு பொருளும் பிழைக்க முடியாது ஓர் இருட்டறையில் ஒரு தொட்டியில் ஒரு செடியை வளர்ப்போம். மற்றொரு செடியை வெயிலில் சூரிய வெளிச்சம் படும்படியான இடத்தில் வைத்து வளர்ப்போம். இருட்டில் வளரும் செடி வரவர வெளுத்து வாடிப்போகிறது. வெயிலில் வளரும் செடி செழித்து வளர்கின்றது. அடை காத்துக் குஞ்சு பொரிக்காத பிராணிகளாகிய ஈ, எறும்பு, பல்லி, மீன், பாம்பு முதலியவற்றின் முட்டைகள் சூரிய வெப்பத்தினுல் தான் குஞ்சுகளாகின்றன. இவற்ருல் சூரிய வெளிச்சம் நமக்கு மிக்க அவசியமானது என்பது நன்கு விளங்குகின்றது. இதுபற்றியே அதற்கு லோகபாந்தவன் என்ற ஒரு பெயரை நமது முன்ஞேர் இட்டிருக்கிருர்கள்.

இவ்வித மேன்மை பொருந்திய சூரியனை அநேக கோளங்கள் ஆகாயத்தில் சுற்றிச் சுற்றி வந்து கொண்டிருக்கின்றன. நாம் வசிக்கும் இப்பூமியும் அவ்விதம் சூரியனைச் சுற்றி வருகிற ஒரு கோளமே யாகும்.

சூரியனுக்கு அருணன், அருக்கன், ஆதவன், ஆயிரங்கதிரோன், இரவி, உதயன், கதிரவன், பகலவன், பானு, ஞாயிறு, செஞ்சுடர், வெய்யோன், விண்மணி என்னும் பல பெயர்களும் உண்டு.

---

5 சிங்கமும் சுண்டெலியும்

ஒரு சிங்கம் காட்டில் அயந்து நித்திரை செய்து கொண்டு இருந்தது. அங்குள்ள சில சுண்டெலிகள் அதன் மீது ஏறி விளையாடின. அவை சிங்கத்தின் காதை ஒரு வளை என்று எண்ணி அதனுள் நுழையவும் ஆரம்பித்தன. சிங்கம் திடுக்கிட்டு விழித்துக்கொண்டு கர்ச்சித்தது. சுண்டெலிகள் ஓடிவிட்டன, ஒன்று மாத்தி



ரம் சிங்கத்தினிடத்தில் அகப்பட்டுக்கொண்டது சிங்கம் கோபத்துடன் சுண்டெலியைக் கால்களினுல் பிடித்துக்கொண்டு, "அடே அற்பப்பயலே! என்னை யார் என்று நினைத்தாய்! நான் மிருகேந்திரன் அல்லவா? இதோ உன்னை நசுக்கி

விடுகிறேன், பார்!'' என்று சொல்லிற்று அவ் வார்த்தையைக் கேட்டு சுண்டெலி நடுக்குற்றுத் திகிலடைந்தது. அது சிங்கத்தைப் பார்த்து, " மிருகேந்திரா, நான் அறியாமற் செய்த பிழையைப் பொறுத்தல் வேண்டும். இந்த உபகாரத்தை நான் எப்போதும் மறவேன் " என்று கூறிற்று. சிங்கம் சுண்டெலியின் மீது இரக்கங்கொண்டு அதைக் கொல்லாமல் விட்டு விட்டது.

சில நாளைக்குப் பிறகு ஒருவேடன் காட்டில் பறவைகள் பிடிக்க வலை கட்டியிருந்தான் அதில் அச்சிங்கம் சிக்கிக்கொண்டது. அதனால் அது தப்பியோட முடியாமல் கர்ச்சித்தது. அக்கர்ச் சனை சுண்டெலியின் காதில் விழுந்தது. உடனே சுண்டெலி தன்னைக் கொல்லாமல் விட்ட சிங்கத்திற்கு ஏதோ ஆபத்து வந்திருக்கிறது என்று எண்ணி, ஓடிவந்து, சிங்கம் வலையில் சிக்கிக்கொண்டிருப்பதைக் கண்டது. உடனே அது, தனது கூரிய பற்களால் வலையின் கயிற்றைத் துண்டித்தது. சிங்கம் வலையை விட்டு வெளியே வந்து பெருமகிழ்ச்சி யடைந் தது.

" சிறு துரும்பும் பற்குத்த உதவும் "



6. காகம்.

பிள்ளைகளே! மேலேயுள்ள படத்தைப் பாருங்கள். இது எதனுடைய படம் தெரியுமா? இதனுடைய நிறம் என்ன? இதன் உடலைப் பாருங்கள்? இதன் உடல் கருமை நிறமாக இருக்கிறது. இவ்வாறு உடல் முழுவதும் கருமையாகவுள்ள காக்கைக்கு அண்டங் காக்கை என்று பெயர். சில காக்கைகளின் கழுத்து சாம்பல் நிறமாக இருக்கும். அவற்றிற்கு மணியங் காக்கைகள் என்பது பெயர்.

காக்கை, பூச்சி, புழு, சோறு, இறந்த எலி முதலியவற்றைத் தின்னும். அது மிக்க தைரிய மும் திருட்டுத்தனமும் உள்ள பறவை குழந் தைகள் கையில் ஏதாவது தின்பண்டங்கள் வைத்திருந்தால் அது திடீரென்று பறந்து வந்து, அவற்றைக் கொத்திக்கொண்டு ஓடிப் போகும்.

காக்கை முட்டையிட்டுக் குஞ்சு பொரிக்கும். தன் குஞ்சுகளை மிக்க அன்புடன் வளர்க்கும். தன் முட்டைகளைக் கருத்தாய்க் காப்பாற்றும். அது ஏனெனில் தான் பிற பறவைகளின் முட் டைகளைத் திருடுவதால், வேறு பறவைகள், அப்படியே தன்முட்டைகளைத் திருடும் என்னும் எண்ணம் அதற்கு உண்டு. காக்கை முட்டை யிட்ட பிறகு ஆணாவது பெண்ணாவது கூட்டில் தங்கி முட்டைகளைக் காக்கும். குயிலுக்கு அடை காக்கத் தெரியாது. குயிலின் முட்டைகள் பெரும் பாலும் காக்கையின் முட்டைகளை ஒத்திருக்கும். குயில் தன் முட்டைகளை, முட்டையிட்ட காக்கை யின் கூட்டில் வைத்து விடும். இதைக் காக் கை யறியாமல் இருக்கக் குயில் ஒரு தந்திரம் செய்யும். ஆண் குயில் காக்கை முட்டையிட் டிருக்கிற மரத்தில் தனிமையாய் இருக்கும் சமய த்தில், ஒரு கிளையில் உட்கார்ந்து கூவும். காக் கை குயிலைத் துரத்தும். குயில் வெகு தூரம்

பறந்து போகும், காக்கையும் பின்தொடரும். அச்சமயம் பெண்குயில் தன் முட்டைகளைக் காக்கையின் கூட்டில் வைக்கும். இதையறியாது அக் காக்கை அம் முட்டைகளை அடைகாத்துக் குஞ்சு பொரிக்கும்.

காக்கை அதி காலையில் எழுந்திருக்கும். அது பகல் எல்லாம் இரைதேடும். மாலையில் தண்ணீரில் மூழ்கிப் பிறகு கூட்டில் அடையும். காக்கைகள் தனித்து வாழ்வதே கிடையாது. பலகாக்கைகள் ஓர் மரத்தில் தங்கி வசிக்கும். காக்கை ஓர் இரையைக் கண்டால், தன் இனமான மற்றைக் காக்கைகளைக் கூவி அழைக்கும்.

காக்கையிட மிருந்து பின்வரும் நீதிகளைக் கற்கலாம். அவை, "அதிகாலையில் எழுந்திருத்தல், இனத்தை விரும்பல், உண்டிக்கழகு விருந்தோடு உண்ணல், தினமும் மூழ்கிச் சுத்தமாயிருத்தல்" என்பனவாம்.

---

7. உடல் நலம்.

நாம் நோயில்லாமல் வாழவேண்டுமானுல் நமது உடம்பு, நாம் உடுக்கும் உடை, உண்ணும் உணவு, குடிக்கும் தண்ணீர், சுவாசிக்கும் காற்று, ஆகிய இவை சுத்தமாக இருத்தல் வேண்டும். இவைதாம் நமக்கு நோய் உண்டா

வதற்கு இடங்களாகும். நாம் எவ்வளவு பொருள் வைத்திருந்தாலும், நோய் இல்லாமலிருந்தால் தான், இன்பமாக இருத்தல் கூடும். "நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்."

நமது உடம்பின் தோலில் அளவில்லாத சிறு துவாரங்கள் இருக்கின்றன. அவை நம் கண்ணுக்குத் தெரியா. அவற்றின் வழியாகவே, நம் உடம்புக் குள்ளிருக்கும் அழுக்கு வெளியாகிறது. நாம் நாடோறும் அழுக்குத் தேய்த்துக் குளிக்காமற் போவோமானல், அத்துவாரங்கள் அடைபட்டு நமக்குச் சொறி, சிரங்கு முதலிய பலநோய்கள் உண்டாகும்.

நம்முடைய சட்டை, துணி முதலியவை அழுக்கடைந்து இருக்குமானல், நாம் அவற்றை உடுக்கக் கூடாது. அத் துணிகளில் உள்ள அழுக்கே நம் உடலிற் படியும். ஆகையால் தினந்தோறும் நமது உடைகளை அழுக்கறத் துவைக்க வேண்டும். இதனல்தான் பெரியோர்கள், "கந்தையானலும் கசக்கிக் கட்டு" என்று சொல்லுகிருர்கள்.

நாம் உண்ணும் உணவு சுத்தமானதாய் இருத்தல் வேண்டும். உடம்புக்கு நன்மையைத் தரக்கூடியதாய் இருத்தல் வேண்டும். அழுகின பழங்களையும் கெட்டுப்போன காய்கறிகளையும்

உண்ணலாகாது. எளிதில் ஜீரணமாகக் கூடிய பண்டங்களைத்தான் நாம் உண்ணல் வேண்டும். இவ்வாறு நல்ல பொருள்களே உணவாகக் கிடைத்தாலும், அவற்றை நாம் கண்டபோதெல்லாம் உண்ணுதல் கூடாது. பசித்தபோது வேண்டியவளவே சாப்பிடல் வேண்டும். பசியில்லாத சமயத்திலும், அளவுக்கு மிஞ்சியும் சாப்பிடுதல் நோயை உண்டு பண்ணும்.

நாம் துவைப்பதும், குளிப்பதும், அருந்துவதும் சுத்தமான நீராய் இருத்தல் அவசியம். குடிக்கும் தண்ணீரைக் காய்ச்சி உட்கொள்ளுதலே சிறந்ததாகும். தண்ணீரில் கண்ணுக்குப் புலப்படாத கிருமிகள் இருக்கும். காய்ச்சினால், அதிலிருக்கும் கிருமிகள் சூட்டினால் இறந்துவிடும். பிறகு வடிகட்டிக் குளிர்ந்த பின் பருகுவது நலம்.

நாம் சுத்தமான காற்றையே சுவாசிக்க வேண்டும். நல்லகாற்று உலவும் இடங்களில் வீடுகள் கட்டவேண்டும். வீடுகளில் நல்லகாற்று வீசுவதற்கும், கெட்டகாற்று வெளியே போவதற்கும் தக்கபடி பலகணிகள் இருத்தல் வேண்டும். வீட்டுப்புறங்களில் தண்ணீர் தங்கிக்கொண்டிருப்பதினாலும், குப்பைகளிருப்பதினாலும், பல சிறு பூச்சிகள் உண்டாகி, வீசுகின்ற நல்ல காற்

ளோடு கலந்து அதனைக் கெடுத்து விடுகின்றன. ஆகவே வீட்டுப்புறங்கள் மிகச் சுத்தமாயிருத்தல் அவசியம்.

"நோயற்ற வாழ்வே வாழ்வு."

---

8. பிரகலாதன்.

பல நாளைக்கு முன், இரணியகசிபு என்ற ஓர் அசுரன் வாழ்ந்து வந்தான். அவன் மிகக் கொடியவன். அவன் பிரமதேவனைக் குறித்துக் கடுமையான தவம் புரிந்தான். பிரமனும் இவன் முன் தோன்றினர். இரணியகசிபு, "சுவாமி பகலிலும், இரவிலும், பூமியிலும், வானத்திலும், உள்ளிலும், வெளியிலும் உன்னால் படைக்கப்பட்ட உயிர் உள்ளதும் இல்லாததுமான எல்லாப் பொருள்களாலும் எனக்கு மரணம் நேரிடல் கூடாது" என்று வேண்டினான். பிரமனும் அவன் தவத்திற்கு மனம் இரங்கி அவன் வேண்டிய வரத்தைத் தந்தருளினர்.

இரணியகசிபு தான் அடைந்த வரத்தை எண்ணி இறுமாப்பு அடைந்தான். தன்னாட்டில் உள்ளவர்கள், வேறு தெய்வங்களைத் தொழலாகாது என்றும், இரணியனை தன்னையேதெய்வம் என்று பாவிக்கவேண்டும் என்றும் கட்

டளையிட்டான். இரணியனுக்குப் பிரகலாதன் என்ற ஒருமகன் இருந்தான். அவன் சிறந்த விஷ்ணு பக்தன். அவன் எப்போதும் "நாராயணாய நம:" என்று சொல்வான். இது இரணி

யனுக்குத் தெரிந்தது. அவனை, "இரணியாய நம:" என்று சொல்லும்படி கட்டளையிட்டான். அவன் அவ்வாறு சொல்வதை மறுத்தான்.

உடனே இரணியன் கோபங்கொண்டு பிரகலா தனைப் பலவாறு வருத்தி, முடிவில் கொல்ல வும் எண்ணினன். அவன் தன் தந்தை செய்த ஒன்றையும் பொருட்படுத்த வில்லை.

ஒரு நாள் இரணியன் தன் மகனை நோக்கி, "மகனே! நீ போற்றும் நாராயணன் எங்கே யிருக்கிறன்?" என்று கேட்டான், அதற்குப் பிரகலாதன், "அவர் எங்கும் இருக்கிறர்" என் றன். உடனே இரணியன் இறுமாப்போடு, "இத்தூணில் இருக்கிறனு?" என்று சொல்லித் தூணை உதைத்தான்.

உடனே, தூணிலிருந்து மகாவிஷ்ணு நர சிங்க ரூபமாய் வெளிவந்து இரணியனைக் கிழித் துக் கொன்றர். பின்னர் பிரகலாதன் கடவு ளின் அருளால் எல்லா நலங்களும் பெற்று வாழ்ந்திருந்தான்.

"தெய்வம் இகழேல்,"

---

9. செங்கல்லின் சரித்திரம்.

நான் ஒரு செங்கல். என் பிறப்பையும் வளர்ப்பையும் கேளுங்கள். அது விநோதமா யிருக்கும். நான் ஒரு ஆற்றுப்படுகையில் வண் டல் மண்ணுக முன்னேயிருந்தேன். என்னை ஒருவன் வெட்டிக் குவித்தான். பிறகு அக்குவிய

லின் பேரில் அவன் தண்ணீரை ஊற்றினுன். மறுநாள் அவன் அக்குவியலை நன்ருக மிதித்தான். பிறகு அதில் சிறிது எடுத்து, அவன் ஒரு பலகை அச்சில் அப்பி ஒரு கல் உருவமாகச் செய்தான். அப்போது என் நிறம் கறுப்பாயிருந்தது.

நான் அவ்விடத்தே கிடந்து, வெயிலால் உலர்ந்து, காய்ந்து கெட்டியானேன். பிறகு அவன் என்னை கட்டைகளின் மேல் வைத்துச் சுட்டான். நான் சிவந்த நிறம் அடைந்தேன்.

சிறிது நாட்களுக்கெல்லாம் என்னை அவன் ஒரு வண்டியில் ஏற்றி ஒரு தெருவிற்கு கொண்டு போனுன். அங்கு அவன் என்னையும் என்னைப் போன்ற வேறுபல கற்களையும் அடுக்கிச் சுவராகக் கட்டி நல்ல வீடொன்றை அமைத்தான். அவ்வீட்டில் பலர் பலகாலம் வாழ்ந்து வந்தார்கள். நீண்டகாலம் சென்றது. பின்னர் அவ் வீடும் இடிந்து பாழாயிற்று. நான் தெருவில் விழுந்து கிடந்தேன். என்னை ஒரு சிறுவன் எடுத்து வீசி எறிந்தான். நான் பல துண்டுகளாய் உடைந்தேன், நான் மழையிலும் நனைகிறேன்; வெயிலிலும் உலர்கிறேன், வரவர என் தேகம் பொடிப் பொடியாய் உதிர்ந்து விடுகிறது. பின்னர்ச் சிறிது காலத்துள் நான் மண்ணேடு மண்ணுய் விடுவேன்.

பிறகு நான் மழைத் தண்ணீரால் தள்ளப் பட்டு வயல்களிலும், குளங்களிலும், ஆறுகளிலும் சேர்ந்து மறுபடியும் வண்டல் மண்ணுவேன்.



10. மளிகைக் கடை

இந்தப் படத்தைப் பார். இது ஒரு மளிகைக் கடையின் படம். கடைகளில் பலவகை உண்டு. அவை, பழக்கடை, ஜவுளிக்கடை, மளிகைக்கடை முதலியன. மளிகைக்கடையில், உப்பு, புளி, மிளகாய், பருப்பு, வெல்லம், உளுந்து, மிளகு, ஜீரகம், கொட்டைப்பாக்கு,

எண்ணெய் முதலிய நமது உணவிற்கு வேண்டிய பல சரக்குகள் விற்கப்படும். ஆகையால் அதைப் பலசரக்குக்கடை என்றும் சொல்லுவதுண்டு.

அந்தக் கடையில் உட்கார்ந்து இருப்பவன் கடையின் முதலாளி. அவன் பக்கத்தில் இருக்கும் பொருள்களைப்பார். ஒரு பெட்டி, தராசு, படிக்கற்கள், படிகள், சில செம்புகள் முதலியன இருக்கின்றன. இவைகள் அக் கடைக்காரனுக்கு அவசியமானவை. அவன் சரக்குகளை விற்று, வாங்கும் பணத்தைப் பெட்டியில் போடுவான். கடையிலுள்ள புளி, மிளகாய், வெல்லம் முதலிய சரக்குகளில் சிலவற்றை நிறுத்து விற்பான். அதற்குத் தராசும், பலம், சேர், வீசை முதலிய எடைபோடும் படிக்கற்களும் வேண்டும். சில பொருள்களை அளந்து விற்க வேண்டும். அதற்குப் படிகளும் மரக்கால்களும் அவசியம். நாம் படியால் அளந்து வாங்கும் சரக்குகள் எவை? உப்பு, பருப்பு, உளுந்து முதலியவற்றை நாம் படியால் அளந்து வாங்குவோம். நல்லெண்ணெய், தேங்காய் எண்ணெய், ஆமணக்கெண்ணெய் முதலியவற்றை வாங்குவது செம்புகள் இல்லாமல் முடியாது. அவற்றிற்குக் கலயச் செம்பு, சேர்ச்செம்பு என்பன பெயராம். கொட்டைப்பாக்கு முதலியவற்றை எண்ணி

வாங்குகிறோம். ஆனால் ஜவுளிக் கடைபோல் கஜக்கோலால் அளந்து வாங்கும் சரக்குகள் மளிகைக் கடையில் கிடையா.

இம்மளிகையில் விற்கப்படும் சரக்குகள் யாவும் நமது ஊரில் விளைந்தவை அல்ல. சில நமது ஊர்ப்பொருள்கள். மற்றும் சில பிறஊர்ச் சரக்குகள். நமது ஊர்ச் சரக்குகள் எவை? பிற ஊர்ப் பொருள்கள் எவை.



11. மண் புழு

இது ஒரு அற்ப உயிராகும். இது பூமிக்குள் வளைதோண்டி வாழும். மழை காலத்தில் இதை வெளியே நாம் அடிக்கடி காணலாம். இது உரு

வத்தில் பாம்புபோல் இருப்பதால் இதை நாகப் பூச்சி என்பது வழக்கம்.

மண்புழுவின் உடல் பல சிறு வளயங்களா லானது. இதற்குக் கண், காது, கால் முதலிய வை கிடையா. உடலின் அடிப்புறத்தே இரண்டு மயிர் வரிசைகள் உண்டு. இவற்ருல் இது சுலப மாய் நகரும்.

இதன் உணவு அழுகின இலைகளும் தழை களும் ஆகும். இவை மண்ணுடன் கலந்திருக் கும் மடித்த இலைகளை மண்ணுடன் விழுங்கும். ஆதலால் இதற்கு "மண்ணுண்ணிப்புழு" என்ற பெயரும் உண்டு. இது, தான் உண்ட மண்ணைப் பூமிக்கு மேல் வந்து வெளிப்படுத்தும். இப்புழு வெளிப்படுத்தின மண் மிகவும் சாரம் உள்ளது. வெளியில் கிடக்கும் இலை தழைகளைத் தன் வளைக்கு இழுத்துச் செல்லும்.

மண் புழுவில் ஆண், பெண் என்ற வகை கிடையாது. எல்லாப் புழுவும் முட்டையிடும். இப்புழுவில் ஓர் அதிசயம் உண்டு. இது இரு துண்டுகளாய் வெட்டப்பட்டாலும் இறக்காது. இரண்டு துண்டுகளும் இரண்டு புழுக்களாய் வளர்ந்து விடும். இவ்வித உயிர்கள் மிகப்பல உள. அவற்றைப்பற்றி நீங்கள் மேல் வகுப்பு களில் படிப்பீர்கள்.

---

12. புலியும் பிராமணனும்

ஒரு காட்டில் ஒரு கிழப்புலி இருந்தது. ஓடி இரைதேட அதற்கு முடியாமையால் அது ஒரு உபாயம் செய்தது. அதனிடம் ஒரு பொற் காப்பு இருந்தது. அதைக் கையில் வைத்துக் கொண்டு அக்காட்டிலுள்ள ஒரு ஓடைக்கரையில் உட்கார்ந்திருந்தது. அவ்வோடையில் சேறு அதிகம். ஜலம் மிகக் குறைவாக இருந்தது.

ஒரு நாள் ஒரு பிராமணன் அவ்வோடைக் கரைவழியே போய்க் கொண்டிருந்தான். புலி அவனைக் கூவி அழைத்து, "ஓ பிராமணா, நான் ஒரு கிழப்புலி. நான் செய்த பாவம் நீங்க நான் தவம்:செய்கிறேன். உன்னைப் பார்த்தால் மிகுந்த

ஏழை யென்று தோன்றுகிறது. என்னிடம் உள்ள இந்தப் பொற்காப்பை நான் தானம் செய்துவிட விரும்புகிறேன். நீ இக் குளத்தில் மூழ்கி இதைப்பெற்றுக்கொள்" என்றது.

பிராமணன் முதலில் புலியிடம் போகப் பயந்தான். ஆனால் அவனது ஆசை அவனை தைரியப்படுத்திற்று. அவன் கொஞ்ச நேரம் தயங்கிக் கடைசியாக புலியிடம் போய்க் காப்பைப் பெறத் தீர்மானித்தான். புலி கூறியவாறு முதலில் நீரில் மூழ்க, அவன் ஓடையில் இறங்கினான். கால்கள் சேற்றில் சிக்கிக் கொண்டமையால் அங்குமிங்கும் நகர முடியாமல் தவித்தான்.

பிராமணன் சேற்றில் சிக்கிக்கொண்டதைக் கண்டு புலி மெல்ல கரையோரத்திற்கு வந்து, அவனது கையைப் பிடித்துக் கரையில் இழுத்துக் கொன்று தின்றது.

பேராசை பெரு நஷ்டம்.

துஷ்டர்கள் வார்த்தையை நம்பலாகாது.

---

13. தேள்

தேள் விஷமுள்ள ஒரு கொடிய ஜந்து. தேள் கொட்டின ஒருவன் படும் துன்பத்தைப் பார்த்தால் நாம் பயப்படுகிறோமல்லவா? தேளைக்

கண்டால் யாவரும் நடுங்குவார்கள். அது வீடுகளின் மூலேகளிலும் மேற்கூரைகளிலும், குப்பையுள்ள இடங்களிலும் வசிக்கும். அது மங்கலான மஞ்சள் நிறம் உடையது. தேள்களில் சில கரு நிறமாயிருக்கும். அவற்றிற்குக் கருந்தேள் என்பது பெயர். அதற்கு விஷம் அதிகம். மற்றும் சில சிவந்த நிறமாய் இருக்கின்றன. அவற்றிற்கு செந்தேள் என்பது பெயர்.



தேளின் தலேப்புறம் உள்ள இரண்டு நீண்ட உறுப்புக்களேப் பாருங்கள்! அவைகள் அதற்குக் கைகளேப் போல் உதவி செய்கின்றன. தேளிற்கு எட்டுக்கால்கள் உண்டு. அதன் பின்புறத்தில் நீண்ட உறுப்பொன்று உளது. அதனே வால் என்று சிலர் சொல்லுவார்கள். அது வால் அன்று; அது அதனுடைய உட

லின் பின்பாகம் ஆகும். அவ்வால் போன்ற உடலின் நுனியில் விஷப்பை இருக்கிறது. அதன் நுனியில் முள்போல் இருப்பதனைக் கொடுக்கு என்பார்கள். அக் கொடுக்கினுல்தான் தன் பகையைக் கொட்டும். கொட்டினுல், விஷம் உண்டு. வலியும் அதிகமாய் இருக்கும்.

சிறு பூச்சிகளும், புழுக்களும் தேளிற்கு உணவு ஆகும். அது பகலெல்லாம் உறங்கி, இரவில் இரை தேடித் திரியும். அதற்குப் பற்கள் உண்டு. அது தன்வாயாலும் கடிக்கும். அதனுல் நமக்கு அதிக நோய் உண்டாவதில்லை.

தேளில் ஆண் பெண் என இருவகையுண்டு. பெண்தேள் முட்டையிட்டுக் குஞ்சு பொரிக்காது. மிருகங்களைப் போல் குட்டி போடும். ஒரு பெண் தேள் ஒரு முறையில் முப்பது குட்டிகள் வரையில் போடும். தேள் தனது குட்டிகள் பெரியன வாகும் வரையில் முதுகின் மேல் சுமந்து செல்லும். சில பெண் தேள் குட்டி போட்டவுடன் இறந்து போகும் என்பார்கள். அது உண்மையன்று.

தேள் கொட்டின இருபத்து நான்கு மணி நேரம் வரையில் வலி இருக்கும். தேள் விஷத்தால், சிலர் இறப்பதும் உண்டு. தேள் கொட்டின உடனே கொட்டின இடத்திற்குச் சற்று

மேல் புறத்தைக் கயிற்றினுல் இறுகக் கட்டுதல் வேண்டும். கொட்டின இடத்தை இரத்தம் வெளிப்படும்படி தேய்ப்பது நலம். வெங்காயத்தைக் கசக்கிக் கொட்டுவாயில் தேய்ப்பதும் ஒரு வகைச் சிகிச்சை ஆகும். வைத்தியர்கள் கொடுக்கும் மருந்தைத் தடவுதல் மிக நல்லது.

நமது வீடுகளில் தேள் வராமல் செய்வதற்கு நாம் மாதம் இருமுறை ஒட்டடை அடிக்க வேண்டும். தினந்தோறும் வீட்டு மூலேகள் கதவு இடுக்குகள், ஜன்னல் இடுக்குகள் முதலியவற்றைச் சுத்தமாய் பெருக்கி வைத்திருத்தல் வேண்டும்.

---

14. கண்ணகி

காவிரி ஆறு கடலில் கலக்கும் இடத்தில் காவிரிப்பூம்பட்டினம் என்ற ஓர் சிறந்த நகரம் உண்டு. அது முற்காலத்தில் சோழ அரசர்களின் தலேநகராய் விளங்கியது. அந்நகரத்தில் கோவலன் என்னும் ஒரு செட்டி இருந்தான். அவன் ஒரு பெரிய தனவந்தன். அவனுக்கு கண்ணகி என்ற கற்புடைய மனேவி இருந்தாள்.

கோவலனுக்கு தீயவர் பலர் நண்பர்களாஞர்கள். அவர்களோடு கூடின கோவலன்,

தன்னிடமிருந்த பொருள்கள் எல்லாவற்றையும் அழித்து விட்டான். கடைசியில் அவனுடைய மனைவி கண்ணகியின் கால் சிலம்புகள் தான் மிகுந்து நின்றன. அவன் அவைகளை விற்று வது வியாபாரம் செய்யலாம் என்று அவளோடு மதுரை நகரை அடைந்தான்.



மதுரை நகரில் ஓர் இடைச்சி வீட்டில் கண்ணகியை இருத்தி, அவளது காற்சிலம்பு ஒன்றை கோவலன் எடுத்துக்கொண்டு வணிகர் வீதிக்கு விற்கச் சென்றான். அங்கு ஒரு பொற் கொல்லனிடம் அதைக்காட்டி விலைபேசினான்.

அக்காலத்தில் மதுரையை நெடுஞ்செழியன் என்னும் பாண்டியன் ஆண்டுவந்தான். அவன்

மனைவியின் கால்சிலம்பு ஒன்று காணமற் போயிருந்தது. கோவலன் கொண்டு வந்த சிலம்பு அரசியின் சிலம்பை ஒத்திருந்தது. இதை அறிந்த அக்கொல்லன் கோவலனைச் சிறிது காத்திருக்கச் சொல்லி விட்டு, அரசனிடம் ஓடி, "வேந்தே! நமது மகாராணியின் சிலம்பு இதோ இருக்கிறது. இதைத் திருடினவன் என் வீட்டில் இருக்கிறான்," என்று கூறினான்.

அதைக் கேட்டதும் அரசனுக்கு அடங்காத கோபம் உண்டாயிற்று. உடனே தனது சேவகர்களை அழைப்பித்து "நீங்கள் இவனுடன் சென்று நமது சிலம்பைத் திருடின கள்வனைக் கொலை செய்யுங்கள்," என்று கட்டளையிட்டான். சேவகர்களும் அரசன் ஆணைக்கு இணங்கி அவ்விதம் செய்தார்கள்.

சிலம்பு விற்கச் சென்ற தன் கணவன் கொலையுண்டான் என்பதை கண்ணகி அறிந்தாள். உடனே தன்னிடமுள்ள மறுசிலம்பை எடுத்துக் கொண்டு மன்னனிடம் ஓடி, "வேந்தே! உமது மனைவியின் கால் சிலம்பின் உள்ளே இருப்பது யாது?" என்று கேட்டாள். அரசன், "என் மனைவியின் சிலம்பின் உள்ளிருப்பது முத்து," என்றான். கண்ணகி அரசன் கையிலிருந்த தன் சிலம்பை வாங்கி உடைத்தாள். அதன் உள்ளே

மாணிக்கங்கள் இருந்தன. அரசன் வெட்கம் அடைந்தான்.

கண்ணகி கோபங் கொண்டு, "தெய்வமே! விசாரியாது என் கணவனைக்கொன்ற அரசனின் நகரம் பாழாகட்டும்," என்று சொல்லிவிட்டுத் தன் கொழுநன் கொலையுண்டு கிடந்த இடம் சென்றாள். அங்கு அவளும் உயிர் துறந்தாள். இன்றைக்கும் கண்ணகியைச் சிலர் தெய்வமாகக் கொண்டாடுகிறார்கள்.

---

15. ஆடு

ஆடு நாட்டு மிருகங்களில் ஒன்று. அது வெகு சாந்தமுள்ள பிராணி. அது நமக்குப் பல வகையில் உபயோகமானது.

அதன் பால் பசுவின் பாலைவிட உருசியானது. உடம்பிற்கு நல்ல புஷ்டியைக் கொடுப்பது. ஆட்டை "எளியோர் பசு" என்று சிலர் கூறுவார்கள். அதன் மாமிசம் சிலர்க்கு உணவாக உபயோகப்படுகிறது. அதன் தோலால் மிதியடி, பணப்பை முதலியன செய்யலாம். அதன் மயிரால் கம்பளங்கள் நெய்யலாம். அதன் சாணம் வயல்களுக்கு நல்ல எருவாகும்.

ஆடுகளில் வெள்ளாடு செம்மறி ஆடு என இருவகை உண்டு. வெள்ளாடு அநேகமாய் கருமை நிறமாகவும், செம்மறி ஆடு பெரும்பாலும் செம்மை நிறமாகவும் இருக்கும். வெள்ளாட்டிற்குப் புல்லைவிட இலைதழைகளில் பிரியம் அதிகம். ஆகையால் செடி கொடிகளைக்



கடித்து வளர விடாமல் நாசம் செய்யும். அது தோட்டங்களிலுள்ள மரங்களை அழிக்கும். அதனாலேயே கிராமங்களில் வெள்ளாடுகளை அதிகமாய் பரவ விடுவதில்லை. சில ஊர்களில் வெள்ளாடுகளை வளர்ப்பதே இல்லை.

செம்மறி ஆடுகள் தழைகளை அதிகம் விரும்புவதில்லை. புல் பூண்டு முதலியவற்றைப் பிரியமாய்த் தின்னும். ஆகையால் சில இடையர்கள் செம்மறி ஆட்டை அதிகமாய் வளர்க்கிருர்கள். காடுகளில் செம்மறி ஆட்டை ஏராளமாய் மேயவிடலாம். செம்மறியில் ஆண் ஆட்டிற்குக் கொம்புகள் சுருண்டு வளைந்திருக்கும்.

சிலர் வேடிக்கைக்கு நல்ல கொம்புள்ள கடாக்களை வளர்க்கிருர்கள். இவற்றை அவர்கள் ஒன்ருேடொன்று சண்டையிடப் பழக்குகிருர்கள்.

---

16. தாவரம்

மரம், செடி, கொடி, புல், பூண்டு ஆகிய இவைகளுக்குத் தாவரம் என்பது பெயர். தாவரங்களுக்கும் நம்மைப்போல் உயிர் உண்டு. நாம் உண்டு வளர்வதுபோல் அவையும் உண்டு வளர்கின்றன. நாம் சுவாசிப்பது போல் அவைகளும் சுவாசிக்கின்றன. ஆனுல் அவை இடம் விட்டு நகர முடியாது.

நமது சரீரம் தலை, உடல், கை, கால்கள் என்ற பல பிரிவுகளை யுடையது. அவ்வாறே தாவரத்திற்கும் வேர், தண்டு, இலை என்ற பல பிரிவுகள் உண்டு.

வேரின் நிறம் வெண்மையானது. வேரில் ஆணிவேர், சல்லிவேர், ஒட்டுவேர் எனப் பல வகையுள. வேர் பூமியைத் துளைத்துக் கீழ் நோக்கி வளரும். அது தாவரத்திற்கு வேண்டிய உணவைப் பூமியிலிருந்து கொண்டு வருகிறது. மேலும் அது, தாவரங்கள் காற்றினுல் கீழே விழாதவாறு காக்கிறது.



தண்டு பருத்து ஓங்கி வளரும் தாவரத்திற்கு மரம் என்று பெயர். சில மரங்கள் அறுபது அல்லது எழுபது அடிவரை வளரும். தண்டு பருக்காமல் மெல்லியதாய் நீண்டு வளரும் தாவரத்திற்குக் கொடி என்று பெயர். உங்களுக்

குத் தெரிந்த மரங்கள், செடிகள், கொடிகள் இவற்றைக் கூறுக. தண்டுகளில் சிலவற்றில் கிளைகள் இருக்கும். சில தண்டுகளில் கிளைகள் இல்லை. கிளைகளுள்ள மரங்கள் எவை? கிளைகள் இல்லாத மரங்கள் யாவை?

இலைகளின் நிறம் பச்சை. இலைகள் ஆகாயத்திலிருந்து தாவரத்திற்கு வேண்டிய உணவைக் கிரகிக்கின்றன. ஆகவே இலைகளும் வேர்களைப்போல் தாவரத்தை வளர்க்கும் உறுப்புக்களாம்.

தாவரங்கள் நமக்கு மிக்க உபயோகமானவை. சில, நமக்கு வேண்டிய உணவுப் பொருள்களைக் கொடுக்கின்றன. மற்றும் சில, நாம் வீடுகள் கட்டுவதற்கு உபயோகமாகின்றன. வேறு சில ஆடு மாடுகளுக்கு உபயோகப்படுகின்றன. தாவரங்களின் இலைதழைகள் பூமிக்குள் மடிந்து எருவாகிப் பயன்படுகின்றன.

---

17. ஈ

இந்த ஈயின் படத்தைப் பாருங்கள். இதன் உடல்; தலை, மார்பு, வயிறு என மூன்று பிரிவுகள் உடையது. இதன் தலையில் இரண்டு சிறிய கொம்புகள் காணப்படுகின்றன. இரண்டு கண்

கள் தலையின் மேற்புறத்தில் தெரிகின்றன. ஈயின் கால்களை எண்ணிப் பாருங்கள். அவை எங்கிருந்து தோன்றுகின்றன ? பக்கத்திற்கு மூன்று ஆக ஆறுகால்கள் இருக்கின்றன. அவை மார்பின் பக்கத்திலிருந்து கிளம்புகின்றன. அக்கால்களில் நுண்ணிய மயிர்கள் இருக்கின்றன. அதன் மார்பின் அடிப்புறத்திலிருந்து இரண்டு மெல்லிய சிறகுகள் முளைத்திருக்கின்றன.



ஈக்களில் ஆண் பெண் என இருவகை உண்டு. பெண் ஈ ஒரு தடவையில், நூறுமுதல் நூற்றைம்பது முட்டைகள் வரையில் இடும். அது குப்பை, அழுக்கு முதலியவற்றில் முட்டைகளை இடும். முட்டைகளையிட்ட நான்கு மணி நேரத்தில் அம்முட்டைகள் சிறு புழுக்களாய்

பொரிக்கப்படும். பிறகு பத்து நாட்களில் புழுக்கள் ஈக்களாக மாறிவிடும்.

ஈக்கள் நமக்குத் தீமையே செய்வனவாகும். அவைகள் நமக்கு வியாதியைக் கொண்டுவரும் தூதர்கள் என்பது பொருத்தமே. அவை எதையும் உண்ணப்பிரியம் உடையவை. அவை மலத்தின்மீதும் உட்காரும்; உடனே பறந்து வந்து நமது உணவின் மேலும் உட்காரும். மலத்தின் மீது உட்கார்ந்தபோது ஈயின் காலிலுள்ள மயிர்களில் மலம் ஒட்டிக்கொள்ளும். பிறகு நமது ஆகாரத்தில் உட்காரும்போது அம்மலம் நமது ஆகாரத்தில் கலந்து விடும். அதை நாம் அறியாமல் உண்டு நோய்க்கு இடம் தருகிறோம். ஆதலால் நாம் ஈக்களை ஒழித்தல் வேண்டும்.

ஈக்களை ஒழிக்கப் பல வழிகள் உள. ஈக்கள் முட்டைவைக்கும் இடமான குப்பை, கூளங்களை நமது வீட்டின் அருகே கொட்டுதல் கூடாது. உணவில் ஈக்களை மொய்க்க விடலாகாது. நமது வீட்டு ஜன்னல்களில், ஈக்கள் வராதபடி, வலைகள் போட்டுக் கொள்ளுவதே மிகவும் நலம்.



18. தச்சன்

இப்படத்தில் உள்ளவன் ஒரு தச்சன். இவன் பலவகைத் தொழிலாளிகளில் ஒருவன் மரவேலை செய்பவனைத் தச்சன் என்பார்கள்.

ஒரு வீடுகட்ட முதலில் சுவர் எழுப்ப வேண்டும். மரத்தினுல் தூண், உத்திரம், மோசனம் முதலியவைகள் செய்தல் வேண்டும். சுவர் எடுப்பவன் கொத்தன். தூண், உத்திரம் முதலியன செய்பவன் தச்சன். மேலும் இவன் மேசை, நாற்காலி முதலிய மரசாமான்களும் செய்வான்.

ஒவ்வொரு தொழிலாளிக்கும் அவனுடைய தொழிலுக்கு ஏற்ற கருவிகள் வேண்டும். தச்சனுக்கு வேண்டிய ஆயுதங்கள் பலவுள. மரங்களை அறுப்பதற்கு வாள் வேண்டும். நாட்டு மரங்களின் பட்டையைச் செதுக்க வாச்சி வேண்டும். மரங்களை இழைக்க இழைப்புளி வேண்டும். வேலைக்கு வேண்டியபடி மரங்களைச் செதுக்க உளி வேண்டும். உளியை வைத்துச் செதுக்கும்படி அடிப்பதற்கு சுத்தி அல்லது கொட்டாப்புளி வேண்டும். மரங்களில் சிறிய துவாரங்கள் இடுவதற்குத் துளைப்பணம் வேண்டும். மரத்துண்டுகளையும் சட்டங்களையும் அளக்க அளவுகோல் வேண்டும்.

தச்சன் தனது ஆயுதங்களை அடிக்கடி கூர்மை செய்தல் வேண்டும். நீ ஒரு தச்சன் வேலை செய்யும் இடத்திற்குப் போய் அவனுடைய ஆயுதங்களைக் கவனித்துப்பார். அவன் அவற்றை உபயோகிக்கும் விதங்களையும் கவனி. நீ இவ்விதமே ஒவ்வொரு தொழிலாளியின் ஆயுதங்களையும், அவன் அவற்றை உபயோகிக்கும் விதங்களையும் உற்று நோக்குதல் வேண்டும்.



19. பருந்து

பருந்து நாம் தினந்தோறும் காணக்கூடிய ஓர் பறவை. அதன் நிறம் பழுப்பு. நாம் சாதாரணமாய் வீட்டுப் புறங்களில் பார்க்கிற பறவைகளில் பெரியது இதுவே.

பருந்தின் அலகு மிக்க உறுதியானது. மேல் அலகு, கீழ் அலகைவிடச் சற்று நீளமானது. மேலும் மேல் அலகு கூர்மையாகவும் நுனியில் வளைந்தும் இருக்கும். இதன் இறகு

கள் நீளமாயும் அகலமாயும் இருக்கும். இதன் வால் இருபிளவாய் இருக்கும். இதன் கால் நகங்கள் கெட்டியாயும் கூர்மையாயும் இருக்கும்.

பருந்து ஆகாயத்தில் நெடுந்தூரம் சென்று பறக்கும். இதன் பார்வை வெகு கூர்மையானது. இது மீன், பாம்பு, தவளை, இறந்த எலி முதலிய வற்றைத் தின்னும். இது நாம் வளர்க்கும் புரு கோழி முதலியவற்றின் குஞ்சுகளைத் தூக்கிப் போய்விடும். ஆறு, குளம் முதலிய நீர் நிலைக ளின் மேற்புறத்தின் மீது பறந்து கொண்டி ருந்து திடீரென்று பாய்ந்து, தண்ணீருக்குள் இருக்கும் மீன்களைக் கால்களால் பற்றித் தூக்கிக் கொண்டு போகும்.

காக்கையின் ஆகாரம் இதன் ஆகாரத்தை ஒத்திருப்பதால் இரண்டிற்கும் பகை உண்டு. ஒரு காக்கை ஒரு பருந்தைத் தனியே எதிர்க்க இயலாது. இரண்டு காக்கைகள் சேர்ந்து, ஒன்று பருந்தின் முன்னும், மற்றொன்று, பின்னுமாக இருந்து எதிர்க்கும். காக்கைகள், பருந்தின் முட்டைகளைத் திருடுவதில் குறிப்பாய் இருக் கும்.

பருந்தின் ஒருவகைக்குக் கழுத்து வெண் மையாய் இருக்கும். அதை இந்துக்கள் கருடன்

என்பார்கள். சிலர், "விஷ்ணுவின் வாகனம்" என்று எண்ணிப் பறக்கும் போது தொழுவார்கள்.

20. போலீஸ் சேவகன்

தம்பி:—அண்ணா! இவ்வீதியில் நின்றுகொண்டிருப்பவன் யார்.

அண்ணன்:—தம்பி! அவன் ஒரு போலீஸ் சேவகன்.

தம்பி:—அவன் ஏன் அங்கேயே நிற்கிறுன்!

அண்ணன்:—தம்பி! அவன் ஜனங்களுக்கு நன்மைகள் செய்ய அங்கேயே நிற்கிறுன்.

தம்பி:—அவன் என்ன நன்மைகள் செய்வான்?

அண்ணன்:—வீதிகளில் போக்கு வரத்தாய் இருக்கும் வண்டிகளுக்கு இடையூருய் மனிதர்கள் கும்பலாய் நின்று கொண்டிரா வண்ணமும், வண்டிகளும் அவ்விதமே ஜனங்களுக்கு இடையூருய் வழி தவறி ஓட்டப் படாமலும் பார்த்துக் கொள்வான்.

தம்பி:—அப்படி இடையூறு செய்பவர்களை என்ன செய்வான்?

அண்ணன்:—அவர்களின் பெயர்களைக் கேட்டு எழுதி, மேல் அதிகாரிகளுக்கு அவர்கள் செய்த குற்றத்தைத் தெரிவிப்பான்.

தம்பி:—அவர்கள் என்ன செய்வார்கள்?

அண்ணன்:—அவர்களை நியாயஸ்தலத்திற்கு வர அழைப்புச்சீட்டு அனுப்பி, குற்றத்தை விசாரித்து அதற்குத் தக்கபடி அபராதம் முதலிய தண்டனை விதிப்பார்கள்.

தம்பி:—அப்படியானுல் அவனுக்குமேல் அதிகாரிகள் யாவர்?

அண்ணன்:—அவனுக்குமேல் சப் இன்ஸ்பெக்டர், சர்க்கில் இன்ஸ்பெக்டர், டிப்டி சூப்ரெண்டெண்ட், சூப்ரெண்டெண்ட் முதலிய அதிகாரிகள் உளர்.

தம்பி:—இவர்களில் யார் தண்டனை விதிப்பவர்கள்?

அண்ணன்:—தண்டனை விதிப்பதற்கு, குற்றத்திற்குத் தக்கபடி, கௌரவ மாஜிஸ்டிரேட், சப்மாஜிஸ்டிரேட், டிப்டி கலெக்டர், கலெக்டர், ஜட்ஜ் முதலிய வேறு சில அதிகாரிகள் உளர்.

தம்பி:—அவனுக்கு இதுதான் வேலையோ?

அண்ணன்:—இதுமட்டுமன்று. ஜனங்கள் வீதிகளில் அசுத்தம் செய்யாமலும், களவு சச்சரவு, மோசம் முதலியவைகள் நடைபெருமலும் பார்க்க வேண்டும்.

தம்பி:—இரவிலும் அங்கேயே நின்றுகொண்டிருப்பானு?

அண்ணன்:—இரவில் வண்டிகள் ஜனங்கள் முதலியவைகளின் நடமாட்டம் அதிகமாயிரா. ஆனல் திருடர்களால் தீங்கு நேராவண்ணம் ஜனங்களுக்கு எச்சரிக்கை செய்துகொண்டு வீதிகள் தோறும் சுற்றிப் பார்த்து வருவான்.

தம்பி:—அவன் ஒருவன் தானே இருக்கிருன். திருடர்கள் பலர் இருந்தால் என்ன செய்வான்?

அண்ணன்:—அதோ பார்! அவன் பையில் ஓர் ஊதுகுழல் இருக்கிறது. அதை ஊதினுல் அதைக்கேட்டவுடன் அருகிலுள்ள பல சேவகர்கள் அங்கு உதவிக்கு வருவார்கள்.

தம்பி:—திருடனை என்ன செய்வார்கள்?

அண்ணன்:—அவனை ஸ்டேஷனில் இரவு முழுவதும் அடைத்து வைத்து மறு தினம் அவனை மாஜிஸ்டிரேட்டிடம் கொண்டு போவார்கள். அவர் திருடனை விசாரித்துத் தண்டிப்பார்.

---

21. கண்ணப்பர்

பல ஆண்டுகளுக்கு முன் மலை நாடு ஒன்றில் வேடர் தலைவன் ஒருவன் இருந்தான். அவன் பெயர் நாகன். அவன் மனைவியின் பெயர் தத்தை. இவர்களுக்கு நெடுநாள் வரையில் பிள்ளை கிடையாது. பின்னர், தத்தை ஓர் ஆண் மகனைப் பெற்ருள். அக்குழந்தை, திண்ணென்றிருந்தபடியால் அதற்குத் திண்ணன் என்று பெயரிட்டார்கள்.

திண்ணனுக்குத் தக்க வயது வந்தவுடன் ஒரு நாள் அவன் நாணன், காடன் என்ற இரு வேடர்களுடன் காட்டிற்கு வேட்டையாடச் சென்றுன். அங்கு ஒரு பன்றி வேகமாய் ஓடுவதைக் கண்டு, அதன்பின் வெகு தூரம் ஓடி அதைத் தன் அம்பினுல் கொன்றுன்.



திண்ணனுக்கு அலைச்சல் மிகுதியால் அதிக தாகம் உண்டாயிற்று, அவன், காடனைப் பன்றியை வதக்கச் சொல்லி விட்டு, தான் நாணனுடன் அருகிலுள்ள ஓர் மலை நதிக்குத் தண்ணீர் அருந்தச் சென்றுன். அந்நதிக்கரையிலுள்ள

ஓர் மலை மீது ஓர் கோயிலைக் கண்டான். அக் கோயிலைப் பார்க்க அவாக் கொண்டான். நாணனுடன் அம்மலை மீது ஏறினான். அங்குள்ள இலிங்கத்தைக் கண்டான்.

மலைமீது இருந்த இலிங்கத்தைக் கண்டதும் திண்ணனுக்குப் பக்தி மேலிட்டது. அவன் இலிங்கத்தைக் கட்டித் தழுவி, "ஐயனே! சுவாமி! இங்குத் தனியாய் இருக்கிறீரே! உமக்குத் துணை யாவர்? ஆகாரங் கொடுப்பவர் யார்?" என்று புலம்பினான். பிறகு ஒருவாறு தேறி மலையினின்று கீழே இறங்கிக் காடன் இருக்குமிடம் வந்தான்.

காடன் இறைச்சிகளை வதக்கி வைத்திருந்தான். திண்ணன் அவற்றை ஒவ்வொன்றும் மென்று சுவையுள்ளவைகளை ஒரு தொன்னையில் எடுத்துக் கொண்டான். வாயில் கொஞ்சம் தண்ணீரை நிரப்பிக்கொண்டான். சில பூக்களைக் கொய்து தலையில் சொருகிக்கொண்டான். வில்லை மறுகையில் வைத்துக் கொண்டு மலையின் மேல் ஏறினான். இலிங்கத்தின் மேலிருந்த பூக்களைக் காலால் தள்ளி வாயிலிருந்த நீரைத் தலையில் துப்பினான். தன் தலையிலிருக்கும் பூக்களை அதன் தலையில் சூட்டினான். கையிலிருந்த இறைச்சித் துண்டுகளை அதன் முன் வைத்துப் புசிக்கும்படி வேண்டினான்.

திண்ணனுடன் வந்தவர்கள் அவனை ஊருக்கு அழைத்தார்கள். அவன் பதிலுரையாதிருக்க இருவரும் இவன் தெய்வப் பயித்தியம் கொண்டான் என்று திரும்ப ஊருக்குச் சென்றார்கள். திண்ணன் வழக்கப்படி பூ, தண்ணீர், இறைச்சி இவைகளைக் கொண்டு படைத்து வந்தான்.

தினப்படி பூஜை செய்யும் சிவகோசரியார் சுவாமியின் முன் இறைச்சி கிடப்பதைக் கண்டு வருந்தினர். ஐந்தாம் நாள் இரவில் சிவபெருமான் சிவகோசரியார் கனவில் தோன்றி, "எனது ஆலயத்தை அசுத்தப்படுத்துகிறவன் எனது பக்தன். நீ அவனை இகழாதே. நாளைய தினம் மறைவில் இருந்து பார்," என்று கூறினர். அவரும் அப்படியே செய்தார். மறுதினம் வழக்கப்படி திண்ணன் பூசை செய்ய வரும்போது சுவாமியின் வலக்கண்ணில் உதிரம் வடியக் கண்டான். கண்டதும் திகில் அடைந்தான். கீழே விழுந்து புரண்டு, "ஐயோ! என் செய்வேன். எவனே ஒருவன் சுவாமியின் கண்ணைப் புண் செய்து விட்டானே!" என்று கதறினன். சில பச்சிலைகளைக் கொண்டு வந்து கண்ணில் பிழிந்தான். உதிரம் நிற்கவில்லை. உடனே தன் வலக் கண்ணைக் களைந்து சுவாமியின் வலக்கண்ணில் அப்பினன். உடனே சுவாமிக்குக் கண் சௌக்கியமாயிற்று.

பிறகு சுவாமியின் இடக்கண்ணில் இரத்தம் வரக்கண்டான். உடனே தன் காலை சுவாமியின் இடக்கண்ணில் ஊன்றிக்கொண்டு தனது இடக் கண்ணை எடுக்க எத்தனித்தான். உடனே சிவ பெருமான் திண்ணனுடைய கைகளைப்பிடித்துக் கொண்டு, "கண்ணப்பா! நில்," என்று மும் முறை கூறி நிறுத்தினர். "உனது கண் எனது கண்ணுகும். உன் பக்திக்கு மெச்சினேன்." என்று கூறி, கண்ணப்பருக்கும் சிவகோசரியாருக்கும் காக்ஷி தந்து கைலாயத்திற்கு ஏகினர்.

---

22. துஷ்டப்பையன்

ஓர் ஊரில் ஒரு பிரபு இருந்தார். அவருக்குக் கண்ணன் என்னும் ஓர் பிள்ளை இருந்தான். அவன் மிகவும் துஷ்டன். தாய் தந்தையர் சொல்லைக் கேட்கமாட்டான். ஒரு நாள் அவன் தந்தை வெளியில் சென்ருர். செல்லும் போது மறதியாகத் தன் கடிகாரத்தை மேஜையின்மேல் வைத்துச் சென்ருர். அவன் அதனைக் கையிலெ டுத்தான். பிறகு அதைத் திறந்து பார்க்க விரும் பினன். அவன் தந்தை ஓர் கத்தியால் அத னைத் திறப்பது வழக்கம். அது அவனுக்குத் தெரியும். அவன் தன் தந்தையின் கத்தியை எடுத்துக் கடிகார மூடியில் குத்தினன். கத்தி வழுக்கி இவன் விரலில் பாய்ந்தது. உடனே

இவன் கையில் பிடித்திருந்த கத்தியையும் கடிகாரத்தையும் விட்டு விட்டான். விலையுயர்ந்த அக்கடிகாரம் கீழேவிழுந்து உடைந்தது. கத்தி திறந்தபடியே விழுந்து காலில் குத்திக் கொண்டது.



இவன் கையிலிருந்தும் காலிலிருந்தும் இரத்தம் ஒழுகிற்று. இவன் என்ன செய்வதென்று தெரியாமல் விழித்துக் கொண்டிருந்தான். அப்பொழுது அவன் தந்தை உள் நுழைந்தார். கண்ணனின் செய்கைக்கு வருந்தினார். அவனைப்

பலவாறு கோபித்து, இனி தன் உத்தரவின்றி ஒரு காரியமும் செய்யக்கூடாது என்று நற்புத்தி கூறினர். கண்ணன் உடம்பு சௌக்கியமாக ஒரு மாதம் பிடித்தது.

ஒரு நாள் பிரபுவைக்காண ஓர் நண்பர் ஒரு மோட்டார் வண்டியில் வந்தார். அவர் வண்டியை நிறுத்தி விட்டு உள் நுழைந்தார். கண்ணன் மோட்டார் ஓட்டும் விதத்தை அநேக தடவை பார்த்திருக்கிறுன். மோட்டார் அருகில் ஒருவரும் இல்லை என்று உணர்ந்தான். மோட்டாரை ஓட்ட வேண்டுமென்னும் ஆசை அவனைத் தூண்டிற்று. உடனே வண்டியிலேறி விசையைத் திருப்பினுன். வண்டி விரைவாக ஓட ஆரம்பித்தது. அதை நிறுத்தும் விதம் அவனுக்குத் தெரிய வில்லை. வண்டி ஓர் பெரிய மரத்தில் மோதி உடைந்தது. கண்ணன் கீழே விழுந்தான அவனது கால் எலும்புகள் முறிந்தன. தன் தந்தையின் கட்டளைக்குக் கீழ்ப்படியாததற்காக வருந்தினுன்.

பிறகு அவன் வைத்தியசாலைக்குக் கொண்டு போகப்பட்டான். அவன் குணமடைய ஆறு மாத காலமாயிற்று. எனினும் அவன் நொண்டியானுன். மற்ற பிள்ளைகள் சந்தோஷமாக ஆடிப்பாடி விளையாடிக் கொண்டிருப்பதைக் கண்டு வருத்த மடைந்தான்.

பிள்ளைகளே! கண்ணன் கதியை கவனித்தீர்களா! நீங்கள் தாய் தந்தையர் சொல்லைக் கேட்டு அவர்களுக்கு அடங்கி நடக்க வேண்டும்.

"தந்தை சொல் மிக்க மந்திரமில்லை"

---

23. துகாராம் சுவாமிகள்

வட இந்தியாவில் பூனு நகரத்துக்குச் சமீபத்தில் தேகு என்ற ஓர் கிராமம் உள்ளது. அதில் சுமார் முன்னூற்றிருபது ஆண்டுகளுக்குமுன் ஒரு சிறந்த ஞானி இருந்தார். அவர் பெயர் துகாராம். அவர் நற்குண நற்செய்கையில் ஒப்பற்றவர். பண்டரி நாதரிடம் இடைவிடாத உள்ளன்பு கொண்டவர்.

துகாராம் இயற்கையில் வெகு ஏழை. அவரது குடும்பத்தார் வறுமையால் பீடிக்கப்பட்ட போதிலும் அவர் அக்கஷ்டத்தை ஒரு பொருட்டாக நினைக்க வில்லை. அவர் எப்போதும் பாண்டுரங்கனையே மனதில் நினைத்து தோத்திரங்கள் சொல்லிக்கொண்டு காலம் கழித்து வந்தார். அதையறிந்த அவ்வூரார் அவர் பஜனை செய்யுமிடத்திற்குத் திரளாகப் போவது வழக்கம்.

அக்காலத்தில் அத்தேசம் சிவாஜி என்னும் பெயர் பூண்ட அரசனின் ஆளுகையிலிருந்தது.

துகாராமின் தெய்வ பக்தியின் பெருமை அரசன் செவிக்கு எட்டியது. அரசன் அப்பெரியாரைத் தரிசிக்க விரும்பி பஜனைக் கூடத்திற்குச் சென்று அவரை வணங்கினான். அவரது பக்தி

யைக் கண்டு வியந்து கொண்டாடினான். அபங்கம் எனப்படும், தோத்திரப் பாடல்களைக் கேட்டுக் கொண்டே உட்கார்ந்திருந்தான்.

அச்சமயம் டில்லி சக்கரவர்த்தியாகிய பாதுஷா சிவாஜியின் அரண்மனையை முற்றுகை

போட்டான். இதை துகாராம் அறிந்தார். உடனே அவர் பாண்டுரங்கனை மனதில் தியானித்து சிவாஜியின் நாட்டைக் காக்கும்படி வேண்டினார். அப்படியே பாண்டுரங்கன் தான் சிவாஜியாக வேடம் பூண்டு பாதுஷாவை எதிர்த்து வென்றார்.

துகாராமின் அதிசயச் செயல்கள் நாடெல்லாம் பரவிற்று. பிறகு யாவரும் அவரை, துகாராம் சுவாமி என்று அழைத்து வந்தார்கள். பிறகு அவர் இந்திராணி நதிக்கரையிலிருந்து பரமபதம் சேர்ந்தார்.

பக்தியின் சிறப்பை விளக்க துகாராமின் சரித்திரம் ஓர் சான்று ஆகும். வடஇந்தியாவில் கபீர், நாகதேவர் முதலிய இவரைப் போன்ற பக்தர்கள் பலர் இருந்தார்கள். தென்னிந்தியாவிலும் நாயன்மார்கள், ஆழ்வார்கள் என்று அநேக பக்தர்கள் இருந்தார்கள். இவர்களைப் பற்றி நீங்கள் மேல் வகுப்புகளில் அறிவீர்கள்.

---

24. மணியார்டர்

கோபாலன்:—“இராமா! எனக்கு புத்தகங்கள் சில வேண்டும். அவை இந்த ஊரில் கிடைக்க வில்லை. அவற்றை வாங்கி அனுப்பும்படி சென்னையிலுள்ள என்

மாமனுக்கு ரூபாய் ஐந்து அனுப்ப வேண்டும். எவ்விதம் அனுப்புகிறது?"

இராமன்:—"கோபாலா! பணத்தைத் தபாலாபீஸ் மூலம் அனுப்ப வேண்டும்."

கோபாலன்:—"தபாலாபீஸ் மூலம் எவ்விதம் அனுப்புகிறது?"

இராமன்:—தபாலாபீஸுக்குப் போய் ஒரு மணியார்டர் பாரம் வாங்கி வா?

கோபாலன்:—அந்த பாரம் என்ன விலை ?

இராமன்:—அதற்கு விலைகொடுக்க வேண்டியது இல்லை. தபாலாபீஸில் இனமாகவே கொடுப்பார்கள். என்னிடமே இதோ ஒரு பாரம் இருக்கிறது. இது தமிழ்ப்

பாரம். எல்லா பாஷைகளிலும் இந்த பாரம் கிடைக்கும். இதில் இக்கோட்டின் கீழுள்ள குறிப்புகளைப் பூர்த்தி செய்.

கோபாலன்:—எல்லாக் குறிப்புகளையும் பூர்த்தி செய்து விட்டேன். இதோ "கூபன்" என்று எழுதியிருக்கிறதே அது என்ன?

இராமன்:—கூப்பனிலுள்ள காலியிடத்தில் நீ உன் மாமனுக்கு தெரிவிக்க வேண்டிய சமாசாரத்தைக் குறிப்பாய் எழுது.

கோபாலன்:—எழுதியாய் விட்டது. பிறகு இந்த பாரத்தை என்ன செய்கிறது ?

இராமன்:—இந்த பாரத்தையும் ஐந்து ரூபாய் இரண்டு அணாவையும் எடுத்துப்போய் போஸ்ட் மாஸ்டரிடம் கொடு. அவர் அதைப் பெற்றுக் கொண்டு ஒரு இரசீது கொடுப்பார். அதை வாங்கிவா.

கோபாலன்:—ஐந்து ரூபாய்தான் அனுப்ப வேண்டும். ஆனால் ஏன் இரண்டணா சேர்த்துக் கொடுக்க வேண்டும் ?

இராமன்:—பணத்தை உன் மாமனிடம் தபாலாபீசார் கொண்டு போய்ச் சேர்ப்பதற்காகக் கூலி இரண்டணா.

கோபாலன்:—எவ்வளவு ரூபாய் அனுப்பினாலும் கூலி இரண்டணாதானே ?

இராமன்:–அல்ல, பத்து ரூபாய்வரையில் இரண்டணு. அதற்குமேல் இருபத்தைந்து ரூபாய் வரையில் நாலு அணு. ஐம்பது ரூபாய்க்கு எட்டு அணு. நூறு ரூபாய்க்கு ஒரு ரூபாய் என்று ஏற்பட்டிருக்கிறது.

கோபாலன்:—பாரத்தையும் பணத்தையும் தபாலாபீஸில் கொடுத்தால் எப்படி என்மாமனுக்குப் பணம் போய்ச் சேரும்?

இராமன்:—இந்த ஊர் தபாலாபீஸ் உத்தியோகஸ்தர்கள், இந்த பாரத்தை பத்திரமாய் பட்டணத்துக்கு அனுப்பி விடுவார்கள். உன் மாமனிடம் பணத்தையும் கூபன் துண்டையும் கொடுத்து விடுவார்கள். உன் விலாசம் எழுதியிருக்கும் துண்டை உனக்குத் தபால் மூலம் திருப்பி அதை அனுப்பி விடுவார்கள்.

கோபாலன்:—என் எனக்கு அனுப்புவார்கள்?

இராமன்:—அத்துண்டின் பின்புறத்தில் உன் மாமன் கையெழுத்து இருக்கும். அதைப் பார்த்து உன் மாமனிடம் பணம் பத்திரமாய்ப் போய்ச் சேர்ந்து விட்டதென்று அறியலாம்.

கோபாலன்:—“இராமா” இன்று நன்றாய் மணியார்டர் செய்யும் விதம் உன்னிடம் அறிந்தேன் போய் வருகிறேன் வந்தனம்.

---

25 காரைக்காலம்மையார்

பல ஆண்டுகளுக்கு முன் காரைக்கால் என்னும் பட்டினத்தில் தனதத்தன் என்னும் பெயர் வாய்ந்த ஒரு வைசியன் இருந்தான். அவன் மிக்க தனவந்தன். அவனுக்குப் புநிதவதி என்று ஓர் பெண் இருந்தது. தனதத்தன்

தனது குமாரியை நாகப்பட்டினத்திலிருந்த பரமதத்தன் என்னும் ஓர் சைவச் சிறுவனுக்கு மணம் புரிவித்தான். தனதத்தனுக்கு புநிதவதி

யைத் தவிர வேறு குழந்தை இல்லை. ஆகையால் அவனுக்குத் தன் மகளை விட்டுப் பிரிய மனமில்லை. அவன் தன் மருமகனைக் காரைக்காலிலேயே இருக்கச் செய்தான்.

பரமதத்தனும் புநிதவதியும் காரைக்காலில் சுகமாய் இல்லறம் நடத்தி வந்தார்கள். புநிதவதி மிகுந்த தெய்வ பக்தியுள்ளவள். வீட்டு வேலைகள் செய்து ஒழிந்த நேரமெல்லாம் ஈசனையே தியானம் செய்து கொண்டிருப்பாள்.

ஒரு நாள் பரமதத்தனைக்காண அவனுடைய சிநேகிதரில் ஒருவன் வந்தான். அவன் இரண்டு மாம் பழங்களைப் பரமதத்தனுக்குக் கொடுத்தான். பரமதத்தன் அவ்விரு பழங்களையும், தன் மனைவியிடம் கொடுத்து விட்டுத் தன் நண்பனுடன் வெளியே சென்றான்.

பரமதத்தன் வெளியே சென்ற சிறிது நேரத்திற்கெல்லாம் ஒருவன் பரமதத்தனுடைய வீட்டிற்கு வந்தான். புநிதவதி அவனை, "யார்? என்ன காரியமாய் இங்கு வந்தீர்?" என்று அன்புடன் வினவினாள். அவன், "அம்மையே! பசி எனக்குக் காதை அடைக்கிறது. எனக்குக் கொஞ்சம் உணவு வேண்டும்," என்றான். உடனே புநிதவதி, அவனை ஆதரவாய் அழைப்பித்து சிறிது அன்னமும், கணவன் கொடுத்திருந்த மாங்கனிகளில் ஒன்றையும் அவனுக்குக் கொடுத்

தாள். அவன் அவற்றையுண்டு பசி தீர்ந்து புநிதவதியை ஆசீர்வதித்துச் சென்ருன்.

சிறிது நேரத்திற்கெல்லாம் வெளியே சென்றிருந்த பரமதத்தன் திரும்பி வீடுவந்து சேர்ந்து உண்பதற்கு ஆயத்தமானுன். புநிதவதி தனது நாயகனுக்கு உணவுடன் மிகுந்திருந்த மாங்கனியையும் அன்புடன் அளித்தாள். பரமதத்தன் மாங்கனியை முதலில் உண்டான். அது மிக இனிப்பாய் இருந்தது. மற்ருெரு பழத்தையும் கொண்டு வரச் சொன்னுன். புநிதவதி திகைத்து உள்ளே சென்ருள். மிக்க தெய்வ பக்தியுள்ளவள் ஆகையால் ஈசனைத் தன் கணவன் உண்ண ஒரு மாங்கனி தரவேண்டுமென்று வேண்டித் தன் கைகளை ஏந்திஞள். அவள் கையில் ஈசனருளால் ஒரு பழம் விழுந்தது. அதைக்கொண்டு போய்க் கணவனிடம் கொடுத்தாள். அதை அவன் உண்டான். அது அவன் மூன் தின்ற பழத்தைவிட உருசியாய் இருந்தது அவன் தன் மனைவியை நோக்கி, “இப்பழம் ஏது? இது நான் கொடுத்த பழம் அன்று. வேறு பழப்போல் இருக்கிறதே,” என்று வினவினுன்.

புநிதவதியின் மனதில் குழப்பம் உண்டாயிற்று. தன் கணவனிடம் உண்மையைச் சொல்லவும் அஞ்சினுள். ஆனுல் பொய் சொல்ல அவளுக்கு மனமில்லை. கணவனிடம் ஒருகாலும்

பொய் புகலலாகாது என்று தீர்மானித்து, "என் ஆருயிர் நாயக! நீர் வெளியே சென்ற சிறிது நேரத்திற்கெல்லாம் ஒரு சிவனடியார் பசியோடு வந்து சிறிது உணவு யாசித்தார். நான் அவருக்கு உண்டி அளிக்கும் போது தாங்கள் கொடுத்த இரு பழங்களில் ஒன்றை அவருக்குப் படைத்தேன். மற்றொன்றை தங்களுக்கு இட்டேன். தாங்கள் இரண்டாவது பழம் உண்ண விரும்பியதால் நான் ஈசனே வேண்டினேன். அவர் இப்பழம் தந்தருளினர்," என்ருள்.

பரமதத்தன் இச்செய்தியை நம்பாது தன் மனேவியை நோக்கி, "நீ கூறுவது உண்மையாயின் ஈசனிடமிருந்து இன்னும் ஓர் பழம் என் முன் வரவழை" என்ருன். புநிதவதியும் அதற்கு இசைந்து ஈசனே மறுமுறை வேண்டினுள். ஒரு மாங்கனி அவள் கையில் தோன்றிற்று. அதைத் தன் கணவனிடம் கொடுத்தாள். அவன் ஆசையுடன் கையிலேந்தினுன்.

பரமதத்தன் அப்பழத்தைத் தன் கையில் ஏந்தினவுடன் அப்பழம் மாயமாய் மறைந்துவிட்டது. அதைக்கண்டு அவன் மதிமயங்கினுன் மேலும் அவன் தன்னுடைய மனேவி ஓர் தெய்வப்பெண் என்றும் அவளோடு வாழ்தல் தகாது என்றும் எண்ணங்கொண்டான்.

ஒரு நாள் திடீரென்று தன் மனேவி அறியாமல் வேறு ஊருக்குப் போய்விட்டான். அங்கு

வியாபாரம் செய்ய ஆரம்பித்தான். வேறு ஒரு பெண்ணையும் கலியாணம் செய்துகொண்டான்.

புநிதவதி காரைக்காலிலேயே தனியாக வாழ்ந்து வந்தாள். அவளுடைய உறவினர்கள் பரமதத்தன் போனவிடந் தெரியாது வருந்தினார்கள். கடைசியாக அவன் மதுரை நகரில் வியாபாரஞ் செய்கிறானென்பதை அறிந்தார்கள் உடனே அவர்கள் புநிதவதியை அழைத்துக் கொண்டு மதுரை நகருக்கு பரமதத்தன் இருக்குமிடந்தேடி அடைந்தார்கள். அவர்கள் அவனைப் புநிதவதியோடு இருந்து வாழும்படி வேண்டினார்கள். அதற்கு அவன், “நான் இவளுடன் வாழ அச்சங்கொண்டு இங்கு வந்தேன்; இவள் மானிடப் பெண் அல்லள்; தெய்வப் பெண் இவளோடு வாழ்தல் தகாது,” என்று கூறி அவள் மாங்கனியை வரவழைத்த விருத்தாந்தத்தையும் விளம்பரப்படுத்தினான்.

புநிதவதியும் அவளுடைய உறவினர்களும் ஊருக்குத் திரும்பிவிட்டார்கள். புநிதவதி தனியாகவே தன் வாழ்நாள் முழுதும் ஈசனைத் துதிப்பதிலேயே காலங்கழித்து வந்தாள். இவளுடைய பக்தியின் சிறப்பு ஊர் எல்லாம் பரவிற்று. இவள் காரைக்காலில் பிறந்தது பற்றி இவளைக் காரைக்காலம்மையார் என்று சொல்வது வழக்கமாயிற்று.

கொன்றைவேந்தன்.

கொன்றை வேந்தன் செல்வன் அடியிணை
என்றும் ஏத்தித் தொழுவோம் யாமே.

1. அன்னையும் பிதாவும் முன் அறி தெய்வம்
2. ஆலயந் தொழுவது சாலவும் நன்று
3. இல்லறம் அல்லது நல்லறம் அன்று
4. ஈயார் தேட்டைத் தீயார் கொள்வார்
5. உண்டி சுருங்குதல் பெண்டிர்க்கழகு
6. ஊருடன் பகைக்கின் வேருடன் கெடும்
7. எண்ணும் எழுத்தும் கண்ணெனத் தகும்
8. ஏவா மக்கள் மூவா மருந்து
9. ஐயம் புகினுஞ் செய்வன செய்
10. ஒருவனைப் பற்றி ஒரகத்திரு
11. ஓதலின் நன்றே வேதியர்க் கொழுக்கம்
12. ஔவியம் பேசுதல் ஆக்கத்திற் கழிவு
13. அஃகமும் காசும் சிக்கெனத் தேடு
14. கற்பெனப் படுவது சொற்றிறம் பாமை
15. காவல் தானே பாவையர்க் கழகு
16. கிட்டா தாயின் வெட்டென மற
17. கீழோ ராயினும் தாழ வுரை
18. குற்றம் பார்க்கில் சுற்றம் இல்லை
19. கூரம் பாயினும் வீரியம் பேசேல்
20. கெடுவது செய்யின் விடுவது கருமம்
21. கேட்டில் உறுதி கூட்டும் உடைமை
22. கைப்பொருள் தன்னின் மெய்ப்பொருள் கல்வி
23. கொற்றவன் அறிதல் உற்றிடத் துதவி
24. கோட்செவிக் குறளை காற்றுடன் நெருப்பு
25. கௌவை சொல்லின் எவ்வருக்கும் பகை
26. சந்ததிக் கழகு வந்தி செய்யாமை
27. சான்றோர் என்கை ஈன்றோர்க் கழகு
28. சிவத்தைப் பேணின் தவத்திற் கழகு
29. சீரைத் தேடின் ஏரைத் தேடு
30. சுற்றத்திற் கழகு சூழ இருத்தல்

31. சூதும் வாதும் வேதனை செய்யும்
32. செய்தவம் மறந்தால் கைதவம் ஆளும்
33. சேமம் புகினும் சாமத் துறங்கு
34. சையோத் திருந்தால் ஐய மிட்டுண்
35. சோக்கர் என்பவர் அத்தம் பெறுவர்
36. சோம்ப ரேன்பவர் தேம்பித் திரிவர்
37. தந்தைசோல் மிக்க மந்திரம் இல்லை
38. தாயிற் சிறந்தோரு கோயிலும் இல்லை
39. திரைகடல் ஓடியும் திரவியம் தேடு
40. தீராக் கோபம் போராய் முடியும்
41. துடியாப் பேண்டிர் மடியில் நேருப்பு
42. தூற்றும் பேண்டிர் கூற்றேனத் தகும்
43. தெய்வம் சீறின் கைதவ மாளும்
44. தேடா தழிக்கின் பாடா முடியும்
45. தையும் மாசியும் வையகத் துறங்கு
46. தோழுதூண் சுவையின் உழுதூண் இனிது
47. தோழனோடும் ஏழைமை பேசேல்
48. நல்லிணக்க மல்லது அல்லற் படுத்தும்
49. நாடோங்கும் வாழக் கேடோன்றும் இல்லை
50. நிற்கக் கற்றல் சோற்றிறம் பாமை
51. நீரகம் போருந்திய ஊரகத் திரு
52. நுண்ணிய கருமமும் எண்ணித் துணி
53. நூன்முறை தேரிந்து சீலத் தோழுகு
54. நேஞ்சை யோளித்தோரு வஞ்சகம் இல்லை
55. நேரா நோன்பு சீரா காது
56. நைபவர் எனினு நோய்ய உரையேல்
57. நோய்யவர் என்பவர் வேய்யவர் ஆவர்
58. நோன் பேன்பது கோன்று தின்னமை
59. பண்ணிய பயிரில் புண்ணியம் தேரியும்
60. பாலோ டாயினும் காலம் அறிந்துண்
61. பீரம் பேணி பாரந் தாங்கும்
62. புலையும் கோலையும் களவும் தவிர்
63. பூரியோர்க் கில்லை சீரிய ஒழுக்கம்
64. பேற்றோர்க் கில்லை சுற்றமும் சினமும்

65. பேதைமை என்பது மாதர்க் கணிகலம்
66. பையச் சென்றால் வையம் தாங்கும்
67. பொல்லாங் கென்பவை எல்லாம் தவிர்
68. போனகம் என்பது தானுழந் துண்டல்
69. மருந்தே யாயினும் விருந்தோ டுண்
70. மாரி யல்லது காரியமில்லை
71. மின்னுக் கெல்லாம் பின்னுக்கு மழை
72. மீகாமன் இல்லா மரக்கலம் ஓடாது
73. முற்பகல் செய்யின் பிற்பகல் விளையும்
74. மூத்தோர் சொல் வார்த்தை அமிர்தம்
75. மெத்தையிற் படுத்தல் நித்திரைக் கழகு
76. மேழிச் செல்வம் கோழை படாது
77. மொழிவது மறுக்கின் அழிவது கருமம்
78. மோனம் என்பது ஞான வரம்பு
79. வளவ னாயினும் அளவறிந் தழித்துண்
80. வானஞ் சுருங்கின் தானம் சுருங்கும்
81. விருந்திலோர்க் கில்லை பொருந்திய ஒழுக்கம்
82. வீரன் கேண்மை கூரம் பாகும்
83. உரவோர் என்கை இரவா திருத்தல்
84. ஊக்கம் உடைமை ஆக்கத்திற் கழகு
85. வெள்ளைக் கில்லை கள்ளச் சிந்தை
86. வேந்தன் சீறின் ஆந்துணை யில்லை
87. வையந் தோறும் தெய்வந் தொழு
88. ஒத்த இடத்து நித்திரை கொள்
89. ஓதாதார்க் கில்லை உணர்வொடொழுக்கம்.

முற்றிற்று.

THE DON BOSCO PRESS, TANJORE.—1937.

எங்களால் பிரசுரிக்கப்பட்ட புத்தகங்கள்.

* துரைத்தனத்தாரால் அங்கீகரிக்கப்பட்டவை.

		அ.	பை.
* சாரதா நவீன பால பாடம்	...	2	6
* சாரதா நவீன இரண்டாம் பாடம்	...	3	0
* சாரதா நவீன மூன்றும் பாடம்	...	3	6
* சாரதா நவீன நான்காம் பாடம்	...	4	6
* சாரதா நவீன ஐந்தாம் பாடம்	...	6	0
* டிராயிங்புக் முதற்பாகம் (Pupils Series)	...	3	0
* டி இரண்டாம் பாகம்	...	3	0
* தாவரநூல் (Some Aspects of Plant Life)	...	6	0
நல்லோர் சரிதை மலர் 3	...	5	0
நல்லோர் சரிதை மலர் 4	...	6	0
* சதுரங்க கணக்கு வாய்ப்பாடு	...	1	0
ஸோஷியாலஜி (Sociology)	...	10	0
* சகுந்தலா அல்லது காதல் வெற்றி	...	8	0
தோத்திரப்பாடற்றிரட்டு	...	1	6

T. N. சுப்பையா & சன்ஸ்,

புஸ்தக வியாபாரம்,

அய்யங்கடைத்தெரு, தஞ்சாவூர்.